
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**927**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

**76**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## ஊழலுக்கு எதிரான பேரெழுச்சி!

ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியில் ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடந்திருப்பதாக, 1995-ஆம் ஆண்டு ஏப்ரல் 15-ஆம் தேதி ஆளுநர் சென்னா ரெட்டியிடம் தி.மு.க. சார்பில், 539 பக்கங்களைக் கொண்ட மனு அளிக்கப் பட்டது. கொடைக்கானல் பிளசன்ட் ஸ்டே ஹோட்டல் கட்ட அனுமதி, கம்பி வடத் தொலைக்காட்சிக்கு லஞ்சம், டான்சி நிலம் அபகரிப்பு, ஸ்பிக் உர ஆலையில் நடைபெற்ற ஊழல், மின்வாரியப் பொருட்கள் கொள்முதலில் ஊழல், ஆசிரியர் பயிற்சிப் பள்ளி - செவிலியர் பள்ளி - மருத்துவக் கல்லூரி ஆகியவற்றிற்கு அனுமதி வழங்கியதில் பல கோடி ரூபாய் லஞ்சம் வாங்கியது என அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் அந்த மனுவில் இருந்தன.

ஆனால், அடுத்த சில மாதங்களில், அதாவது 1995 ஜூலை 20-ஆம் தேதி டெல்லி யில் நடைபெற்ற தேசிய முன்னணிக் கூட்டத்தில், அந்த அணியில் அ.தி.மு.க.வைச் சேர்த்துக் கொள்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதை எதிர்த்து, தேசிய முன்னணியிலிருந்து தி.மு.க. விலகுகிறது என்று மறுநாளே கலைஞர் அறிவித்தார். இத்தகைய பரபரப்பான அரசியல் சூழலுக்கு மத்தியில்தான், 1996-ஆம் ஆண்டு நடைபெறவிருந்த சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக திருச்சியில் எட்டாவது மாநில மாநாட்டைக் கூட்டியது திராவிட முன்னேற்றக் கழகம்.

ஓவியம் : சிகரன்




ஜனவரி 26, 27, 28 ஆகிய 3 நாட்கள் மாநாடு நடைபெற்றது. முதல் நாள் மாலையில் நடைபெற்ற பேரணியில், தி.மு.க. தொண்டர்கள் சுமார் 25 இலட்சம் பேர் கலந்துகொண்டனர். ஊர்வலம் ஒவ்வொரு இடத்தையும் கடந்து செல்லவே சுமார் 14 மணி நேரம் ஆனது. திருச்சி திக்குமுக்காடிப் போனது.

மறுநாள் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் க.அன்பழகன் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். "1991-இல் தி.மு.க. ஆட்சியைக் கலைப்பதற்காக, அன்றைய குடியரசுத் தலைவர் இரா.வெங்கட்ராமன் 50 லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கினார்" என பேராசிரியர் கூறிய குற்றச்சாட்டு அரசியல் களத்தைப் பரபரப்பாக்கியது. மேலும், இம்முறை தி.மு.க. ஆட்சியைப் பிடிக்கும் என்றும் அவர் உறுதியோடு கூறினார்.

மூன்றாவது நாள் மாநாட்டில் மாநில சுயாட்சி, ஒன்றியத்தில் தமிழ் ஆட்சிமொழி, ஈழத்தமிழர் உரிமை மற்றும் தமிழ்நாட்டின் உரிமைகளை வலியுறுத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக, உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் ஆகியவற்றால் கண்டிக்கப்பட்ட ஜெயலலிதா உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

நிறைவுரையாற்றிய கலைஞர், "வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் ஊழல் மிகுந்த அ.தி.மு.க. ஆட்சியைத் தோற்கடிக்க அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும்" என்று உடன்பிறப்புகளுக்கு கட்டளையிட்டார்.

அடுத்த சில மாதங்களில் தேர்தல் நடைபெற்றது. தி.மு.க. மட்டும் தனித்து 172 இடங்களில் வென்றது. கூட்டணியில் போட்டியிட்ட தமிழ் மாநில காங்கிரஸ் 39 இடங்களையும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 8 இடங்களிலும், பார்வர்டு பிளாக் ஒரு இடத்திலும் வென்றன. அ.தி.மு.க. வெறும் 4 இடங்களில் மட்டுமே வென்று படுதோல்வியை சந்தித்தது.

ஜெயலலிதாவே பர்கூர் தொகுதியில் கழக வேட்பாளர் சுகவனத்திடம் தோற்றுப் போனார். 'திருச்சி என்றால், கழகத்திற்குத் திருப்புமுனை' என்பது எட்டாவது மாநில மாநாட்டிலும் நிரூபணமானது.

...கூட்டம் திரளும்

## 'வாக்குத் திருட்டு'க்கு எதிராகக் கையெழுத்து!

'இந்தியத் தேர்தல் ஆணையம், அரசியலமைப்பைச் சிதைக்கும் செயல்களைச் செய்து வருகிறது' எனக் குற்றம்சாட்டியுள்ள மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, அதற்கான கண்டனத்தைப் பதிவு செய்ய 'வாக்குத் திருட்டு' என்கிற கையெழுத்து இயக்கத்தைத் தனது இணையதளத்தில் தொடங்கியுள்ளார்.

தேர்தல் ஆணையம், பீகாரில் மேற்கொண்ட சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம் பல சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில், மகாராஷ்டிரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் தேர்தல் ஆணைய பட்டியலில், போலி வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளதை ஆதாரங்களுடன் வெளியிட்டுள்ளார் ராகுல் காந்தி.

டெல்லியில், கடந்த 7-ஆம் தேதி, டெல்லியில் பத்திரிகையாளர் சந்திப்பில், தேர்தல் ஆணையம் மீது கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்த அவர், 5 விதமாக வாக்குத் திருட்டு நடைபெற்றுள்ளதாக விளக்கினார்.


ஒரே முகவரியில் வெவ்வேறு குடும்பத்தினர், இல்லாத முகவரியில் பல வாக்காளர்கள் எனப் பல முறைகேடுகள் மூலம் பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெற்றதாகக் கூறினார். 'ஒருவருக்கு ஒரு வாக்கு' என்கிற ஜனநாயக உரிமையைப் பறிக்கும் இந்தச் செயலைக் கண்டித்து, அவரது இணைய தளத்தில் தொடங்கியுள்ள 'வாக்குத் திருட்டு' கையெழுத்து இயக்கத்தை வலுவாக்க வேண்டியது ஜனநாயக சக்திகளின் கடமை. ஆதரவளிக்க, இந்த கியூ ஆர் கோடினை ஸ்கேன் செய்யவும்.



## ஃப்ளாஷ்பேக்



### செம்மொழித் தமிழ்ப் பேரொளி விருது!



கவிஞர்
மார்ஷல் முருகன்

2004-ஆம் ஆண்டு மதுரையில், 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற முழக்கத்தை முன்வைத்து 5 நாள் கருத்தரங்கம், ஆய்வரங்கம் மற்றும் முத்தமிழ் விழா நடைபெற்றது. திருக்குறள் செம்மல் ந.மணிமொழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாநாட்டைப் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள் பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்தார். ஐந்தாம் நாளில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பாராட்டு விழாவாக நடைபெற்றது. அப்போது தலைவருக்கு, 'செம்மொழித் தமிழ்ப் பேரொளி' என்ற விருது வழங்கி பாராட்டு செய்யப்பட்டது. அந்த விருதை கலைஞர் அவர்களின் ஒப்புதலுடன் அறிவாலயத்தில் கொண்டுவந்து வழங்கினோம். கண்ணாடிப் பேழைக்குள் தங்கமுலாம் பூசப்பட்ட வாழ்த்து மடல், அய்யன் திருவள்ளுவர் 'கட் அவுட்' ஆகியவை அமைக்கப்பட்ட அந்தப் பேழையை மறைந்த பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் வழங்க, பாராட்டுரையை நான் வாசித்தேன். உடன் கழகப் பொருளாளர் ஆற்காட்டார், சா.கணேசன், பேராசிரியர் மற்றும் கவிஞர் புரட்சிக் கவிதாசன் ஆகியோர் உள்ளனர்.

– கவிஞர். மார்ஷல் முருகன்,
தலைமைக் கழகப் பேச்சாளர், மதுரை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

**76**

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## மொழி எங்கள் உயிருக்கு நேர்!

தமிழர்களிடம் இன்றைக்கும் தொடரும் தமிழ் மொழிப் பற்றுக்கு முக்கிய காரணமாகத் திகழ்வது மொழி உரிமைப் போராட்டங்கள்தான். 1938, 1948, 1965, 1986 எனப் பல்வேறு காலங்களில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்களின் வரலாறு முழுமையாகப் பதிவு செய்யப்படாமல் இருப்பது பெருங்குறைதான். அவ்வப்போது வெளிவரும் சில நூல்கள் இந்தக் குறையை ஓரளவு நிவர்த்தி செய்கின்றன.

அப்படி 1938, 1965, 1986 ஆகிய மூன்று காலகட்டங்களில் நடைபெற்ற மொழி உரிமைப் போராட்டத்தில் நேரடியாகப் பங்கேற்று சிறைசென்ற களப் போராளிகளின் பதிவுகளைக் கொண்டு அண்மையில் வெளியாகி இருக்கும் நூல் 'இந்தி எதிர்ப்புப் போர்'. இக்லாஸ் உசேன் அவர்கள் தொகுத்திருக்கும் இந்த நூலை, கருஞ்சட்டை பதிப்பகம் வெளியிட்டுள்ளது.




தமிழ்நாடு ஒரு நூற்றாண்டிற்கு முன்பே முன்னெடுத்த மொழி உரிமைப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை உணரத் தொடங்கி, இந்திக்கு எதிராக கர்நாடகா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்கள் கிளர்ந்தெழுந்திருக்கும் தருணத்தில் களப் போராளிகளின் கருத்தைப் பதிவு செய்திருக்கும் இந்நூல் கவனம் பெறுகிறது.

'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற லட்சிய முழக்கம் எழ, காரணமாக அமைந்த 1938-ஆம் ஆண்டு, முதல் மொழியுரிமைப் போராட்டம் குறித்து, 'விடுதலை' இதழில் செய்தியாளராகப் பணியாற்றிய பேராசிரியர் அன்புகணபதி அவர்களின் நினைவுகள் இடம்பெற்றுள்ளன. பெரியாரும் அவர்தம் தொண்டர்களும் இப்போராட்டம் வெற்றியடைய ஏற்றுக்கொண்ட பணிகள் பற்றி எல்லாம் மிக விரிவாக இக்கட்டுரையில் அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

1989-ஆம் ஆண்டு வெளிவந்த தந்தை பெரியாரின் 111-வது பிறந்தநாள் மலரில் இக்கட்டுரை வெளிவந்துள்ளது.

1938-ஆம் ஆண்டு போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்த நடராசன், தாளமுத்துவைப் போல், 1965-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பேசப்பட்டவர்கள் காமராசன்-காளிமுத்து என்கிற தி.மு. கழகத்தை சேர்ந்த மாணவர்கள். அப்போராட்டம் மாணவர் எழுச்சிப் போராட்டமாக, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் எப்படியெல்லாம் கிளர்ந்தது என்பதை, அப்போது மாணவராக இருந்த கவிஞர் நா.காமராசன் அவர்கள் எழுதியிருக்கிறார். மொழி உரிமைக்காக மாணவர்கள் போராடியதைப் பார்த்து, சில காவல்துறையினர் அவர்களை மாண்புடன் நடத்தியதையும், சிறைவாசத்தின் போது தி.மு.கழகத் தோழர்களால் சிறைச்சாலைகள் அறிவு விவாதங்கள் நடைபெறும் இடங்களாக திகழ்ந்ததையும் இதில் பதிவுசெய்திருக்கிறார்.

1986-ஆம் ஆண்டு ஹிந்தி இம்ப்ளிமென்டேஷன் கமிட்டி (Hindi Implementation Committee) -யைச் சேர்ந்த எம்.பி.களின் தகாத செயலால் மூண்ட மாபெரும் போராட்டத்தை, அன்றைய தி.மு.க. இளைஞர் அணி கோவை மாவட்ட அமைப்பாளராக இருந்த பொள்ளாச்சி மா.உமாபதி அவர்கள் பதிவுசெய்துள்ளார்.

பொள்ளாச்சியில் சில இளைஞர்கள் முன்னெடுத்த சிறு போராட்டம் அரசியலமைப்பின் 17-வது பிரிவை எரிக்கும் அளவிற்கு எப்படிப் பரவியது என்பதை அவர் விவரித்துள்ளார்.

களப்போராளிகளின் இப்பதிவுகள் மொழிப்போர் வரலாற்றை மட்டும் நமக்கு கடத்தாமல், மொழி-இன-மான உணர்வின் அவசியத்தையும் மிக நுணுக்கமாக எடுத்துக் கூறுவதால், இந்த நூல் பெரிதும் கவனம் பெறுகிறது.

...வாசிப்போம்.

## ஒருவரி நிகழ்வு

### புதுக்கோட்டையில் செயற்குழு, பொதுக்குழு

1959-ஆம் ஆண்டு, பிப்ரவரி 7 மற்றும் 8-ஆம் தேதிகளில் கழகத்தின் செயற்குழு, பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. பொதுத் தேர்தலில் திமு.கழகம் போட்டியிடுவது என்று அந்தப் பொதுக் குழுவில்தான் முடிவு செய்யப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131